செய்தி வெளியீடு எண் 23 நாள் 09.01.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ. 11 லட்சத்தி 05 ஆயிரம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (09.01.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பெற்றுக் கொண்டார். மேலும் இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், உதவிகள் வழங்கிடவும் கோரி மனுக்களை அளித்தனர். இதில் நிலம் சம்பந்தமாக 103 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் 80 மனுக்களும், சமூக நலத்திட்டம் 04 மனுக்களும், குடும்ப அட்டை 74 மனுக்களும், ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலம் 01 மனுவும், வேலைவாய்ப்பு 17 மனுக்களும், உரிமம் 02 மனுக்களும், சட்டம் மற்றும் ஒழுங்கு 11 மனுக்களும், ஊரக / நகர்புற வளர்ச்சி 18 மனுக்களும், கடனுதவி 06 மனுக்களும், அடிப்படை தேவை / போக்குவரத்து / சுகாதாரம் 05 மனுக்களும், வேளாண்மை / கால்நடைத்துறை / மீன்வளம் 12 மனுக்களும், இதரதுறை 30 மனுக்களும், கல்வி 04 மனுக்களும், பேரிடர் 52 மனுக்களும், சான்றிதழ் 18 மனுக்களும், சான்றிதழ் நகல் 01 மனுவும் என மொத்தம் 438 மனுக்கள் பெறப்பட்டது.

இம்மனுக்கள் மீது துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளவும், பயனாளிகளுக்கு உதவிடும் வகையில் விரைந்து பரிசீலிக்க வேண்டும் என துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் சார்பாக, 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெற்ற 8 மாணவ, மாணவிகளுக்கு தந்தை பெரியார் விருது மற்றும் ஊக்கத்தொகை தலா ரூ.10,000-த்திற்கான (8 நபர்களுக்கு மொத்தம் ரூ.80,000) காசோலைகளையும், மாவட்ட வழங்கல் அலுவலகம் சார்பாக 08 நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், முன்னாள் படைவீரர் நல அலுவலகம் சார்பாக 5 பயனாளிகளுக்கு ஈமச்சடங்கு நிதி உதவி தலா ரூ.5,000-த்திற்கான (மொத்தம் ரூ.25,000) காசோலைகளையும், பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடி நிலை அலுவலராக பணிபுரிந்து விட்டு வீடு திரும்பும் போது விபத்தில் மரணமடைந்த திரு.சாமிநாதன் என்பவரின் வாரிசுதாரர்கள் தாரணி (மகள்), ஜெய்கர் (மகன்), திருமதி.மகேஷ்வரி (மனைவி), திருமதி.தாட்சாயணி (தாயார்) ஆகியோருக்கு மொத்தம் ரூ.10,00,000-த்திற்கான காசோலைகளையும் தேர்தல் ஆணைய நிதியிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.பெரியசாமி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருமதி.ட்டி.ஆர்.மல்லிகா, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.வ.சந்தியா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திருமதி.எஸ்.ஷர்மிளி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~